**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்



**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

# Educational Environment of the Coastal Land Women in the Novels *Kadaladi* and *Thuraivan* of Kumari District

**R. Mary Johnsy,** Reg No : 18213094022010, Research Scholor, Department of Tamil, Muslim Arts College, Thiruvithancodu, Kanyakumari, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0001-3115-6513**
**Dr. Y. Rani,** Assistant Professor of Tamil, Muslim Arts College, Thiruvithancodu, Kanyakumari, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0005-2579-9239**
**DOI: 10.5281/zenodo.14752634**

## Abstract

*In Kumari district, coastal women were often backward in terms of education in the past. Bharathiyar says that men and women are born as equals. Similarly, education is equal for men and women. If women develop knowledge, ignorance can be eradicated in this region. In the past, coastal women of Kanyakumari district were largely deprived of education. Bharathiyar emphasized equality, stating that men and women, as human beings, are equal and so should their access to education. He believed that empowering women through education could eradicate ignorance from the world. This article discusses the challenges faced by women in acquiring education in the neithal (coastal) region as portrayed in Kurumpanai Berlin's "*Kadaladi*" and Christopher Antony's "*Thuraivan*". Topics include obstacles to women's education, poverty's impact on learning, women's rights, and educational environments. This article explains the difficulties faced by women in the education of coastal land, education in poverty, women's rights, educational environment, etc. found in Kurumpanai Berlin's novel "Kadaladi" and Christopher Antony's "*Thuraivan".

**Keywords:** Women's rights, women's slavery, women's education, kadaladi, Thuraivan

## References

[1] Aranganathan, P. *Bharathi, Bharathidasan kavithaigalil Desiya Parvai.* Tamil Department, N.K.M. College, Pollachi.
[2] Christopher Antony. *Thuraivan*. Mukkadal Book Publication, No. 11, 33rd Street, Balaji Nagar, Chennai – 91, November 2015.
[3] Berlin, C. *Kadaladi*. New Century Book House, Chennai - 600098. 2017.
[4] Walter, S. *Varlam*. Karungal, Selali Publishing House, 2019
[5] Sri Chandran. *Naladiyar Moolamum Theliyuraiyum*. Varthamanan Publishing House, Chennai -34, 1989.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
373
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

# குமரி மாவட்ட *கடல் அடி* மற்றும் துறைவன் நாவல்களில் நெய்தல் நிலப்பெண்களின் கல்விச்சூழல்

**ரா. மேரிஜான்சி**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பதிவு எண்:18213094022010. முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி. தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0001-3115-6513
**முனைவர் ஏ. ராணி**, நெறியாளர் & உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி. தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0005-2579-9239
**DOI: 10.5281/zenodo.14752634**

**ஆய்வுச்சுருக்கம்**

*குமரி மாவட்டத்தில் கடலோர பெண்கள் பெரும்பாலும் முந்திய காலங்களில் கல்வியறிவு பின்தங்கிய நிலையில் இருந்து வந்தனர். இதனை பாரதியார், மனிதர்களாக பிறந்த ஆணும், பெண்ணும் சமம். அது போன்று கல்வியும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமம் என்று கூறுகிறார். பெண்கள் அறிவை வளர்த்தால் இந்த வையகத்தில் அறியாமையை ஒழித்து விட முடியும். குறும்பனை பெர்லினின் -* ***கடல் அடி*** *நாவல் மற்றும் கிறிஸ்டோபர் ஆன்றனியின் -* ***துறைவன்*** *நாவலில் காணப்படும் நெய்தல் நிலப் பெண்களின் கல்வியில் ஏற்பட்ட இடர்பாடுகள், வறுமையில் கல்வி, பெண்ணுரிமை, கல்விச் சூழல் போன்றவை இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** பெண்ணுரிமை, பெண்ணடிமை, பெண்கல்வி, கடல் அடி, துறைவன்.

**முன்னுரை**

கல்வி என்பது '**கல்'** என்னும் சொல் அடியிலிருந்து பிறந்ததென்பர். மனிதனை மனிதனாக மாற்றுவது கல்வி என்பர். அறியாமை என்னும் இருளை அகற்றுவது.. வாழ்வில் மனிதன் பெற வேண்டிய அனைத்தையும், உணர்த்தி நிற்பது கல்வி என்றால் அது மிகையாகாது. உலகியல் அறிவோடு பகுத்தறிவினையும் வழங்கி நிற்பது கல்வி. "கல்வி (Education) என்பது தத்துவத்தின் சக்தி வாய்ந்த ஒரு பக்கம் ஆகும். கல்வி என்பது இலத்தீன் சொல்லான 'Educatum' என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். 'நு' என்றால் 'உள்ளேயிருந்து' என்றும், 'Duco' என்றால் 'வெளிக்கொணர்தல்' என்றும்பொருள்படும். எனவே, Education என்றால் 'உள்ளேயிருந்து வெளியே கொண்டு வருவதாகும் என்று மீனாட்சிசுந்தரம் விளக்கம் தருகிறார்.

**கல்வியின் நிலைப்பாடு**

கல்வியினால் ஏற்படும் நன்மை குறித்துப் பேசவந்த நாலடியார்,

**குஞ்சியழகும் கொடுந்தானைக்கோட்டழகும்**
**மஞ்சள்அழகும்அழகல்ல, நெஞ்சத்து**
**நல்லயாம் என்னும் நடுவு நிலையாம்**
**கல்வியழகே அழகு. (நாலடியார். 131)**

தலை மயிரைச் சீர்படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானை கரையிட்ட அழகும், மஞ்சள் பூசுவதால் உண்டாகும் அழகும் உண்மை அழகல்ல. மனத்தளவில் உண்மையாக நடந்து கொள்கிறோம் என்னும் நடுவு நிலையாம் ஒழுக்க வாழ்க்கையைத் தரும்கல்வி அழகேமிக உயர்ந்த அழகாம்.

பெண்ணடிமை தீர்ந்த பின்னர் நாட்டின் போதுமான கல்வி நிலையும் உயர வேண்டும் என்று கருதினார் பாரதி எனலாம். இதனை,

**வீடு தோறுங் கலையின் விளக்கம்**
**வீதி தோறும் மிரண்டொரு பள்ளி**
**நாடு முற்றி லுமுள்ளன ஆர்கள்**
**நகர் களெங்கும் பலபல பள்ளி,**
**தேடு கல்வியிலாத தொரூ ரைத்**
**தீயினு க்கிரை யாகம டுத்தல்**
**கேடு தீர்க்கு மமுத மெனன்னை**
**கேண்மை கொள்ள வழியிவை கண்டீர் (பாரதியார்கவிதைகள், 'தோத்திரப்பாடல்கள், வெள்ளைத்தாமரை' பா. 6)**

**பெண் கல்வி**

நாட்டின் அரசியல், விடுதலை கருதிப் பாடிய பாரதிதாசன் பெண்ணடிமை ஒழியவேண்டும் என்றும், பெண் கல்வி போற்றப்பட வேண்டும் என்றும் கருதினார். ஆகவே தான், பெண் கல்வியைப் பல இடங்களில் வலியுறுத்திப் பாடினார்.

**பெற்றநல்தந்தைதாய்மாரே-நும்**
**பெண்களைக்கற்கவைப்பீரே!**
**இற்றைநாள்பெண்கல்வியாலே-முன்**
**னேறவேண்டும்வையமேலே!**
**பெண்களால்முன்னேறக்கூடும்- நம்**
**பெண்தமிழ்நாடும்எந்நாடும் (பாரதிதாசன்)**

ஆக, நல்ல தந்தையும், தாயும் எங்கள் பெண்களைக் கல்விகற்கச் செய்ய வேண்டும். அதனால், இந்த வையமே முன்னேற்றமடையும் என்கிறார் பாரதிதாசன். இதை மிடுக்கோடு கோரவில்லை, மிகப் பணிவான வேண்டுகோளாகவே முன்வைக்கிறார் (ப. அரங்கநாதன், ப.130) பெண் கல்வி மறுக்கப்பட்ட போது அதை எதிர்த்துக் குரல் கொடுத்தார் பாரதியார்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி**

**பேணி வளர்த்திடும் ஈசன்**

**மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல**

**மாதர் அறிவைக் கெடுத்தார் (பாரதியார்கவிதைகள், 'முரசு', பா. 9)**

என்றும்,

**கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்**

**காட்சி கெடுத்தி டலாமோ**

**பெண்களறிவை வளர்த்தால் வையம்**

**பேதைமை யற்றிடுங் காணீர். (பாரதியார் கவிதைகள், 'முரசு', பா. 9)**

என்றும்,

**ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**

**அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம் (பாரதியார் கவிதைகள், புதுமைப் பெண்-பா. 4)**

குமரி மாவட்ட மக்கள் பெரும்பாலானோர் கல்வியில் பின்தங்கியுள்ளனர். பின்னாளில் அவர்களுக்கு கல்வி பற்றிய விழிப்புணர்வு ஏற்படவே அவர்கள் கல்வி கற்க தொடங்குகின்றனர். நூறு ஆண்டுகளுக்கு முன்னால் கத்தோலிக்கப் பாதிரியாரால் தொடங்கப்பட்ட பள்ளிக்கூடம் இன்னும் அதே எட்டாம் வகுப்பைத் தாண்ட முடியாமல் நடுநிலைப் பள்ளியாகவே உள்ளது (பெர்லின். சி ப. 30) என்பதிலிருந்து பள்ளிக் கூடம் குறைவாக இருந்தது புலப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் குமரி மாவட்டத்தில் பலரும் பலவிதமான உயர் படிப்புகளில் படித்து வேலைக்குச் செல்கின்றனர். அங்கு பள்ளிக்கூடம் மட்டுமின்றி, கல்லூரிகளும் கட்டப்பட்டுளளன என்பதை நாவலில், "**வீட்டுக்கு வீடு டிகிரிபடிச்சவங்க இருக்காங்க. நம்ம சமுதாயத்துக்கதல விதியமாத்தினது இந்த காலேஜி தான். இந்த காலேஜ் வராடி இருந்தண்ணா நம்ம சமுதாயம் இந்தளவுக்கு முன்னேறியிருக்காது**."( கிறிஸ்டோபர் ஆன்றணி, ப. 220) என இடம் பெற்றுள்ளது. மேலும், பலர் உயர் படிப்புகளும் படித்து வெளி மாநிலங்களுக்கு வேலைக்குச் செல்கின்றனர் என்பதை, "படிப்பு முடிந்து ஜீவா வீட்டிற்கு வந்தாள். அம்மா, அப்பா, அண்ணா உங்க மூன்று பேருக்கும் ஒருமகிழ்ச்சியான செய்தி, எங்க காலேஜில கேம்பஸ் இன்டர்வியூல நான் தேர்வு செய்யப்பட்டிருக்கேன். சென்னையில வேலை". (வர்ளம்நாவல், ப. 46) என தகவல்கள் உறுதி செய்கின்றன.

**வறுமையிலும் கல்வி**

பெற்றோர்கள் படிக்கவில்லையெனினும், பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டுமென விரும்புவது உண்டு. அந்தவகையில், குமரி மாவட்ட மக்கள் விதிவிலக்கல்ல, தங்களுடைய குழந்தைகளைப் படிக்கவைக்க வேண்டுமென விரும்பினர் என்பதை நாவலில், "ஆரோன்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கடற்கரைக்கு வருவதை பர்த்லோமி விரும்புவதில்லை. ஆரோனை எப்படியாவது படிக்கவைக்க வேண்டும். என்ன படிக்க வைக்க வேண்டும் என்பதெல்லாம் பர்த்லோமிக்கு தெரியாது". (துறைவன்நாவல், ப. 55) என்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கல்வியில் ஏற்பட்ட இடர்பாடுகள்:**

கல்வி கற்கும் போது பல இன்னல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்கள், சமுதாயத்தில் ஏற்படும் சிக்கல்களின் காரணமாகப் படிப்பினை தொடர முடியாமல் பலர் உள்ளனர். குமரி மாவட்டத்தில் பெண்களைப் படிக்க அனுப்புவதில் ஏற்படும் இன்னல்களை நாவலில், "வயசுக்கு வந்த புள்ளைய இவ்வளவு தூரத்துல எல்லாம் அனுப்ப முடியாது. குலம் கெட்டுக் கெடக்கு, பொன்னொரு தட்டம், பூவொரு தட்டமுன்னு பொத்திப் பொத்தி வளத்தமக்கள் கண்ட நாய்வளுக்க வாயில எரையாகக் குடுக்கமுடியாது. மகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் இருப்பதற்கு ; நிர்மலாவின் அம்மா காரணம் சொன்னாள்". (கடல்அடி, ப. 30) எனப் பதிவு செய்துள்ளன. இதிலிருந்து பெண்களின் கல்வி என்பது கேள்விக்குறியாக உள்ளது என்பது தெளிவாகிறது.

**பெண்ணுரிமை**

சமுதாயத்தில் பெண்ணுரிமை மறுக்கப்பட்டு அடுப்பங்கரையிலேயே முடங்கியிருந்த காலத்தில் பெண் உரிமைக்காகவும், பெண் கல்விக்காகவும் எண்ணற்ற எழுத்தாளர்கள் முன்வந்தனர். அந்தவகையில், "**பாரதியாரின் பெண்ணுரிமை இயக்கச் சிந்தனைகளின் ஊற்றுக் கண்களை அவர் ஆசிரியராக இருந்த 'சக்கரவர்த்தினி' இதழில் காண முடிகிறது. ஆய்விதழ் பெண் கல்வியை வலியுறுத்துவது என்பதை உணர்த்த இதழின் தலையங்கப் பக்கத்தில் பின்வரும் புதிய குறட்பாவை இயற்றி மகுடமாக வெளியிட்டு வந்தார் பாரதியார்."**

**பெண்மை அறிவோங்கப் பீடுயரும் பெண்மை தான்**
**ஒண்மையுற ஓங்கும் உலகு. (பாரதி)**

**அறிவின் வளர்ச்சியினாலே பெண்மைக்குச் சிறப்புண்டாகும். பெண்மை பெருமையுடன் கலந்தவிடத்து அந்நாடு சிறப்புடையதாகும் என்பது பொருள். (பெ.சு.மணி. ப.159)** எனக் குறிக்கிடுகிறார் பெ.சு.மணி அவர்கள்.

**முடிவுரை**

பெண்களுக்குக் கல்வி என்பது சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரைபல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தற்போதைய சூழலில் பலப் பெண்கள் பல்வேறு துறைகளில் சாதனை நிகழ்த்துகின்றனர். எனினும், காலங்காலமாகக் கடைபிடிக்கப்பட்டுவரும் சிலநடைமுறைகளிலிருந்து பலரும் மாறாமல் இருக்கின்றனர். குமரி மாவட்ட குழந்தைகள் படிப்பில் மட்டுமின்றி, ஓவியம் வரைவதில் சிறந்து விளங்கியுள்ளனர். கல்வித் திறமை மட்டுமின்றி பல்வேறு திறன்களைப் பெண்கள் பெற்றிருந்தனர். இசையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாகவும் கோவில்களில் பாடற்குழுவிலும் இருந்து

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

வருகின்றனர். பள்ளிகளில் விளையாட்டு நிலையிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஓவியம், தையல் போன்றவற்றிலும் உயர் படிப்பிலும் பல அதிகாரிகளாகவும் இருக்கக்கூடிய சூழல் இருந்து வருகின்றது.

**குறிப்புகள்**

[1] அரங்கநாதன்,ப. *பாரதி, பாரதிதாசன் கவிதைகளில் தேசியப்பார்வை.* தமிழ்த்துறை, ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

[2] கிறிஸ்டோபர் ஆன்றணி. *துறைவன்* நாவல். முக்கடல் நூல் வெளியீடு, எண் 11, 33 ம் தெரு, பாலாஜி நகர் , சென்னை – 91, நவம்பர் 2015.

[3] பெர்லின், சி. *கடல்அடி* நாவல். நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை - 600098. 2017

[4] வால்டர், சு. *வர்ளம்* நாவல். இம்மேஜி பிரிண்ட் அவுட், கருங்கல், சேலாளி பதிப்பகம், 2019

[5] ஸ்ரீ சந்திரன். *நாலடியார் மூலமும் தெளிவுரையும்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை -34, 1989.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.